# قَصِيْدَةُ الصَّلَاحِ عَلٰى صَاحِبِ الْفَلَاحِ

இதாகிறது ஸய்யிதுனா **ஹபீபு முஹம்மது ஸதகதுல்லாஹ்** என்ற **பல்லாக்கு வலியுல்லாஹ்** நாயகம் ﵁ அவர்கள் மீது அவர்களின் முரீதும், ஹலீஃபாவுமான *S.P.*பட்டிணத்தைச் சேர்ந்த ஆலிம் புலவர் அல்லாமா அஷ்-ஷேய்கு **முஹம்மது முஸ்தஃபா ஆலிம்** ﵀ அவர்களால் கோர்வை செய்யப்பட்ட அரபுத்தமிழ் புகழ்ப்பா ஆகும்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**(1) சோபனம் வ மர்ஹபா** سُوْبَنَمْ وَمَرْحَبًا سُوْبَنَمْ وَمَرْحَبًا
**சோபனம் வ மர்ஹபா**
**சோபனம் வ மர்ஹபா** سُوْبَنَمْ وَمَرْحَبًا اَهْلًا لِفَلَّاكُّ وَلِيِّ
**அஹ்லன் லி பல்லாக்கு வலி**

(2) பாரினில் புகழ்ப்பெருகும்
பல்லாக்கு நாயகத்தின்
காரணத்தை சொல்ல என்னால்
கவியால் முடியாதே

(3) கடல்மீது கப்பலின்றி
கால்நடையாய் நடந்து வந்த
காமிலுவே யா ஷேய்கனா
ஸனதீ வ பல்லாக்கு வலி

(4) புவிமீதில் உங்களைப் போல்
புகழுடையோர் யாருமில்லை
கவிகள் சொறியும் எங்கள்
காரணர் பல்லாக்கு வலி

(5) எங்களுடைய நாயகத்தை
எங்களூர் பொதுஜனங்கள்
எங்களூர்கழைத்து கொண்டு
ஏற்றிக்கொண்டு வரும் சமயம்

(6) உடைமரமும் காடுகளும்
ஓடைகளும் இருக்க கண்டு
ஒழுச் செய்து சுபுஹு தொழ
ஓரிடத்தில் இறங்கினரே

(7) துய்யோன்தனை வணங்கி
சுபுஹு தொழுத பின்பு
கொஞ்சம் நகர்ந்து கொஞ்சம்
பலகாரம் அருந்தும் போது

(8) அந்த பனம்தோப்புகளை
யானை அம்பாரியுடன்
அந்தா போகுதென்று
அறிவித்தீர் யா வலி

(9) சொன்ன ஒரு மணிக்குப் பின்பு
சொன்னது போல் யானை ஒன்று
என்ன விரைவாக ஓர்
எங்கிருந்தோ வந்ததுவே

(10) பின்னால் ஓர் மணிக்கப்பால்
பிரியமுடன் வரும் யானை
முன்னாலே காட்டியே தான்
மொழிந்தீர்கள் யா வலி

(11) வந்த அந்த யானை தானும்
வாகாய் வலியவர்க்கு
வரிசை சுஜூதிட்ட பின்பு
வரங்கேட்டு சென்டது கான்

(12) கண்ணாரேந்தல் கண்மாயக்கும்
கனத்த அலியாம் புலிக்கும்
கணக்காண மத்திபத்தில்
காட்டினரே அற்புதத்தை

(13) கண் திஷ்தி கண்ணேரு
கரு நாவின் நாவேரு
வண் துஷ்டரின் வினைகள்
வாரா தருள் புரிவீர்

(14) இந்த புதுமையைப் போல்
எப்போதும் நான் கண்டதில்லை
எங்கள் குருராஜரே
எங்கள் வலியுல்லாஹ்வே

(15) சிங்கநகர் வந்தவுடன்
சிறப்பான பள்ளி சென்று
சிறப்பாய் துஆவிருக்க
செழிப்பாய் மழை பெய்தது கான்

(16) தொல்லை பெரும் நெருப்பு
தொண்டிதனில் பிடித்திடவே
மெல்ல கீழக்கரையிலிருந்து
மெதுவாய் அமர்த்தினர் கான்

(17) எங்கள் சிங்கம் நகரில்
இருந்து வந்த பெரும் நெருப்பை
உங்கள் பரக்கத்தினால்
ஒதுக்கி வைத்தீர் யா வலி

(18) ஸஆததுல் அதபிய்யாவும்
சன்மார்க்க சங்கமதும்
சங்கையுள்ள ராஜசிங்க
மங்களத்தின் தீனவரும்

(19) ஆணவரும் பெண்ணவரும்
அதபான பாலகரும்
மாணவன் முஸ்தஃபாவும்
மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு

(20) எங்கள் பாவம்பொறுக்க
எங்களூரும் தலைக்க
ஏந்திடுங்கள் நாயகமே
உங்களிரு கரங்களையும்